விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 17 அவணி 7 தூங்கேஜ் 6 இதழ் 194
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-8-1985

"தமிழ்மக்கள் பாதுகாப்புக்கு ஆயுதம் வழங்கப்படும்"

சென்னையில் பாலசிங்கம் அறிக்கை

(சென்னை)

"ஆயுதப் படையிவரைத் 'தாக்கிவிட்டு ஓடும்' தந்தி ரத்தை, தமிழ்ப் போராளிகள் இனிமேல் கையாளமாட்டார் கள். தமிழ் மக்களைப் பாது காக்க அவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் அளிப்பதுதான் தமிழ்போராளிகளின் அடுத்த நிட்டம்" என்று தமிழீழ விடு தலைப் புலிகளின் சார்பில் திரு. ஏ. எஸ். பாலசிங்கம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளார்

சென்னையில் அவர் விடுத்த மேற்படி அறிக்கையில்; "தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள அவர் களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டு, ஆயுதங்களும் வழங்கப்படும்" என்றும் தெரி வித்துள்ளார்.

ராஜீவ் ஜே ஆர் ஆலோசனை

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கை ஜனா திபதி ஜே. ஆர். ஜெயவர்தி

(8-ம் பக்கம் பார்க்க)

திப்புபேச்சுவார்த்தைவைப்பு பாரதம் பெரும் கவலை!

விமானத்தில் தீ விபத்து 65 பேர் பலி!

(லண்டன்)

பிரிட்டிஷ் விமான மொன்று தீ விபத்துக் குள்ளானதில் சுமார் அறு பதைந்த பிரயாணிகள் கருகி மாண்டனர். 54 சடலங்கள் மீட்கப்பட் டுள்ளன.

விமான நிலைய ஓடு தரையில் வைத்தே இவ் விமானம் தீவிபத்துக் குள்ளானது. (ரா)

'யுத்தநிறுத்தம்' நீடித்தால் திம்பு சந்திப்பு தொடரலாம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான திம்பு பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது

இந்த விபரத்தை நேற்று வெளியிட்ட இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே என் டிக்ஷிற்; "இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வுகாண உதவும் தற்போதைய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றால், வன்முறையில் ஈடுபடு பவர்கள் மீது உரிய கட்டுப்பாடு அவசியம்" என்று கருத்து வெளியிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

இலங்கை ஜனதிபதிமீது இந்திய மேலிடம் நம்பிக்கை இழக்கின்றது

சமீபகாலநிலைமைதுறித்து 'இந்து' நிருபர் ரெட்டி விமர்சனம்

[புதுடில்லி]

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நம்பிக்கையளிக்கும் விதத்தி லான ஒரு கொள்கையை மேற் கொள்ளும்படி செய்யலாம் என கருதிவந்த இந்திய உயர் மட்ட அதிகாரிகள் இப்போ ழுது தங்களை அவர் மிகமோச மாக கைவிட்டுவிட்டார் என்ற மனப்பான்மைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர். திரு ஜெயவர்த் தனவின் சமீபத்திய போக்கு இந்தியஅதிகாரிகளுக்கு அதிர்ச் சியையும் அதிருப்தியையும் கொடுத்துள்ளன என 'இந்து' பத்திரிகையின் பிரதம அரசி யல் விமர்சகர் திரு ஜி கே.

(5-ம் பக்கம் பார்க்க)

3 இளைஞர்கள் நிலை கவலைக்கிடம்

[கொழும்பு]

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் உண்ணாவிரதமிருக்கும் ஐந்து தமிழ் இளைஞர்களில் மூவரின்நிலை நேற்று வரை கவலைக் கிடமாக இருந்ததாகத் தெரி விக்கப்பட்டது.

இம்மூன்று இளைஞர்களும் சிறைச்சாலை மருத்துவமனையில் மயக்க நிலையில் உள்ளனர்.

"சிறையில் இளைஞர்கள் சித்திரவதையின்பின் இறந்துள்ளனர்!"

[யாழ்ப்பாணம்]

"1948-ம் ஆண்டு மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறிப்பதில் ஆரம்பித்த ஸ்ரீ லங்கா அரசு 1958, 77, 79, 81, 83 என வரிசைக்கிரம மாக கிட்டமிட்ட வகையில் தமிழ்த்தேசம் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டது. பின்னர் பயங்கர வாத தடைச்சட்டம் மூலமும் பல அப்பாவி இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு முகாம்

(8-ம் பக்கம் பார்க்க)

பட்டினியை எதிர்நோக்கும் திருமலை தமிழ் அகதிகள்!

[திருகோணமலை]

திருகோணமலையில் உள்ள அகதி முகாம்களில் இருக்கும் தமிழ்க் குடும்பங்கள் உண வின்றி பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாக அச் சம் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள முகாம்களுக் போதிய நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை என்றும் வைத்திய வசதிகள் எதுவும் இல்லை என்றும் புகார் செய்யப் படுகிறது.

திருகோணமலையிலுள்ள நிலாவெளியில் உள்ள முகாம் களில் 1,200 குடும்பங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

விசாரணைக் குழு

(வவுனியா)

வவுனியாவில் இம்மாதம் 16 ம் திகதி இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம்

8-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மாவட்ட அபி. சபை உறுப்பினர் சுட்டுக்கொலை!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அபி விருத்திசபை முன்னாள் உறுப் பினர் [தமிழர் விடுதலைக் கூட்டணி] தர்மபாலசிங்கம் (55 வயது) நேற்று முன் தினம் இரவு சுட்டுக்கொல்

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கையின் இனப்பிரச்னை: "இந்தியா வேறுமுறையை கையாளவேண்டும்!"

ராஜீவுக்கு வீரமணி தந்தி

[சென்னை]

"இலங்கைத் தமிழ் மக்க ளின் இன்னல் தீர "தனி நாடு" ஒன்று தான் சரியான தீர்வாகும். ஆகையால் இது விஷயத்தில் பாரதம் துணிச்ச லுடன் புதியதொரு அணுகு முறையைக் கையாளவேண் டும்" என்ற தொனிவிடக் கழக பொதுச் செயலாளர் திரு. கே. வீரமணி இந்திய பிரத மர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள தந்தி யில் குறிப்பிட்டுள்ளார்.

"அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மீண்டும் இனப்படுகொலையை ஆரம்பித் துள்ளது இப்படியான சூழ் நிலையில் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து கலந்து கொள் ளும்படி தமிழர் பிரதிநிதிகளை வற்புறுத்த வேண்டாம்" என் றும் அத்தந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது (ரா)

பல்கலைக்கழக மாணவர் மறியலின் எதிரொலி: யாழ் நகரில் அரசாங்க அலுவலகங்கள் ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட் டத்தை மீறி 18 மாதங் களுக்கு மேல் சிறைவைத் திருக்கும் தமிழ் இளைஞர் களை விடுதலை செய்யக்கோரி யாழ். நகரில் பல்கலைக்கழக மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தியதால், அரசாங்க காரியாலயங்கள் யாவும் ஸ்தம்பித்தன.

அரசாங்க செயலகம், கல் விக் கந்தோர், யாழ். மாநகர சபை, வங்கிகள், மற்றும் அரசாங்க காரியாலயங்களி நேற்றுக் காலை மாணவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன

காரியாலயத்திற்கு வந்த சகல ஊழியர்களும் உள்ளே செல்லாமல் திரும்பிச்சென்ற னர்.

யாழ். அரசாங்க செயலகக் கொடிக்கம்பங்களில் கறுப்புக் கொடிகளைக் கட்டிய பின்னரே மாணவர்கள் பிரதான வாசல் உட்பட சகல வாசல்களிலும் மறியல் இருந்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

அரிவளம்பரம்

தேவை

முன்னணியர் உள்ள டிவிவரி சைக்கிள் உடனடி தேவை. நல்லநிலையில் இருந்தால் நேரில் வரவும். "றோயல் இன்டஸ்றீஸ், பொன்னையா கேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. 177

பலஇன கோழிகளும் இறைச் சிக்குரி தேவை. நியாய விலை யுடன் நேரில் வந்தும் பெற றுக்கொண்டுப்படும் ஹோட் டல் பரடைஸ், 91, கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23131. 184

தமிழ் கிறிஸ்தவ ஆசிரிய ருக்கு கோண்டாவில் கிழக்குப் பகுதி அல்லது இதற்கு அண் மையான இடங்களில் சகல வசதிகளுடன் சிறிய வீடு அல் லது வீட்டில் ஒருபகுதி தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்க வும். விளம்பர இல: 95, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 95

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் விற்பனை யாளர் தேவை. அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது. அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். 187

இனிப்புகள் தயாரிக்கும் கைமெசின் அச்சுகளுடன் தேவை. தொடர்பு: கு.சுக்கின ராஜா, மே/பா. செ. இராஜ கோபால், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 157

சேவை

வெளிநாட்டுப் பிரபாண ஒழுங்குகள், தமிழ் ஆங்கில தட்டச்சு, ரேனியோ வேலை கள். அஞ்சல்வழி ஆங்கிலம், திருமண சேவை ஆகியனவற் றிற்கு-மல்லிசேவிசஸ்: 37(351), மணிக்கூட்டு வீதி, (வெலிங் டன் தியேட்டர் சந்தி), யாழ்ப் பாணம். தொலைபேசி: 22762. 189

தவறிவிட்டது

பண்டத்தரிப்புக்கும் இள வாலை கன்னியாஸ்திரி மாட சாலைக்கும் இடையில் 21-8-85 அன்று காலை எனது வானில் இருந்து ரொக்கம் ரூபா 5000/- தவறிவிட்டது கண்டெடுத் தோர் தயவுசெய்து கீழ்க் கண்ட விலாசத்தில் ஒப்படைக் கவும். தகுந்தசன்மானம் வழங் கப்படும். ராஜன் பொன்னம் பலம், கிளிநொச்சி. 191

அருளப்பு-அன்ரனீஸ், பெரிய விளாகி, இளவாலை என்னும் விலாசமுடைய எனது அடை யாள அட்டை விளானுக்கும் சங்காணைக்குமிடையில் காண மல் போய்விட்டது. கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட விலாசத்தில் ஒப்ப டைக்கவும். சன்மானம் வழங் கப்படும். 180

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பல ஆயிரக்கணக்கில் அகதிகள்

[திருகோணமலை]

திருகோணமலையிலுள்ள பன்குளம் என்னும் கிரா மத்தில் 5 தமிழர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு துப்பாக்கி பால் சுட்டுக் கொலைப்பட்ட தாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலாவெளியில் 7 ஆயிரம் தமிழ் அகதிகளும், சாம்பல் தீவில் 1000 அகதிகளும் தஞ் சம புகுந்திருக்கின்றனர்.

[பெ-மா]

திருவிழா

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோயில் திருவிழா இம்மாதம் 21-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமானது. இவ் வுற்சவம் தொடர்ந்து பத்து நாள்கள் வரை நடைபெறும்.

உற்சவத்தில் இம்மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும், 30-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடை பெறும்.

சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இராணுவ தன்னார் ஒப்ரேய் தேவனின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி சுவரொட்டிகள் யாழ்ப்பாணப் பகுதி எங்கும் ஒட்டப்பட்டுள்ளது

தமிழீழ மக்கள் விடுதலை முழக்கம் தமிழீழ விடுதலை இரா ணுவம் கூட்டாக இந்த சுவ ரொட்டியை வெளியிட்டுள் ளன.

அச்சுவரொட்டியில் எரி கின்ற தமிழினத்தின் உ நினைவு எண்ணம், சித்தங் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை. நாம் தமி ழீழம் அமைப்போம் என்று எழுதப்பட்டுள்ளது.

சுவரொட்டியின் அடியில் தமிழீழ விடுதலை ராணுவம், ரெலா, புளொட் கூட்டு என்று ஆங்கிலத்திலும் எழுதப் பட்டுள்ளது. (ஈ)

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் ஆவணித்திங்கள் 10 ம் நாள் (26-08 85) திங்கட்கிழமை முற்பகல் 8-00 மணி முதல் 9 30 மணி வரை உள்ள சுபவேளையில்

நே. நடராஜா அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **பொன்னம்பலம்** (கணக்காளர் - லண்டன்) அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **அபிராமசுந்தரி** அவர்களுக்கும்

யாழ் நாச்சிமார் அம்மன் கோவிலில் நடைபெற விருக்கும் திருமண வைபவத்தில் குடும்பசமேதராய் கலந்து ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்:

திருமதி நே நடராஜா, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. (155)

ப. இராசரெத்தினமும் பாரியாரும் 35, இவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் மருதப்பு செல்லத்தம்பி

மலர்வு: 15-04-1922 உதிர்வு: 24 07-1985

எமது குடும்ப விளக் காய் ஒளிச்சுடராய்ப் பிரகாசித்து, திடீரென அணைந்து எம்மையெல் லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி, இறைவனடி சேர்ந்துவிட்ட உங்களின் ஆத்ம சாந்திக்காக எல் லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி யோருக்கும், தாமாகவே முன்வந்து உதவிகள் புரிந்தோருக்கும் எமது துயரத்தில்பங்குகொண்டு ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

கோணவில் மேல்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். 79

பெண்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு

(QATAR) கட்டார் அரசாங்க மகளீர் பல்கலைக்கழகத்தில் பராமரிப்பு வேலை

★ பல்கலைக்கழக மகளீர் விடுதியிலேயே இலவச தங்குமிடவசதியும், இலவச உணவும், இலவச மருத்துவ வசதிகளும்,
★ 10 நாட்களுக்குள் பிரயாணம் செய்ய வேண்டும்.
★ பாஸ்போட், இரண்டு பாஸ்போட் பிரதிகளும், 6 படங்களுடன் நேரில் உடன் வரவும்.

விலாசம்:- **"திருத்தணிகை"** நவாலிவீதி, ஆனைக்கோட்டை.

நேரம்:- காலை 9-00—மாலை 1-30.

Approval No: FE/6/FEA/184/ 4098 193

31-ம் நாள் நினைவஞ்சலி

சங்கானை

சி. க.

பேரம்பலம்

(ஆசிரியர்)

பூவுலகிற்கு அனுப்பியது:
12-10-1931

விண்ணுலகிற்கு அழைத்தது:
24-07-1985

அன்புக்கிருப்பிடமே! அறிவொழுகும் சித்திரமே! பண்பிற்நிறைவிடமே! பார்போற்ற உதித்தவரே! எமைவிட்டுப் பிரிந்தாலும் என்றென்றும் மறவோமே!

பிரிவால் துயருறும்:
மனைவி: அன்னலட்சுமி,

"லக்சுமி வாசா" சங்கானை, (175)

சோர்ந்து வாடும்: மக்கள்: கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, ஜோதிஸ்வரி, நிகிலாதீஸ்வரி.

விற்பனைக்கு

கிளிநொச்சி கண்டி ரோட் டில் கடைகள் கட்டக்கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ராஜன் பொன் னம்பலம், 'ராஜன் பில்டிங்' கிளிநொச்சி. 190

கோப்பாய் தெற்கில் கோப் பாய் அரசடி கந்தோருக்கும், மாதாகோயிலுக்கும் இடை யில் யாழ்ப்பாணம் - பருத்தித் துறை வீதிக்கு மேற்குப் பக்கத் தில் வீடுகட்ட ஏற்ற மூன்று பரப்புக் காணி விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: அப் பப்பா செல்லையா, மாவிட்ட புரம் கந்தசாமி கோவில் முன் வீதிப்பக்கம், பளை, தெல்லிப் பழை. 179

சண்டிலிப்பாய் வடக்கு 6 பரப்பு வீடு கட்டும் காணி. விரும்புவோர் P. இலங்கை நாதனுடன் சண்டிலிப்பாய் வடக்கு தொடர்பு கொள்ள வும். 167

மின் விநியோகத் தடை

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை அவசர திருத்த நிர்மாண வேலைகளுக் காக ஆலையிறவு, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், தண்ணீர்த்தாய், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குரிய மின் விநியோகம் தடைப்படும் என்பதை அறியத்தருகின் றேன். இதனால் பொதுமக்க ளுக்கு ஏற்படும் அசௌகரியங் களுக்காக வருந்துகின்றேன்.

மின் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பகுதி,
மாங்குளம்.

சிவமயம்

திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் தவராஜா
மணமகள்: செல்வி சிவலோசனாதேவி
இடம்: சுன்னாகம் பிள்ளையார் ஆலயம்
காலம்: 25-8-1985 ஞாயிற்றுக்கிழமை
காலை 7 41 மணி தொடக்கம் 9-17 மணி வரை.

வரவேற்பு உபசாரம்

மணமகன் இல்லம்: 26-8-1985 திங்கட் கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 7-00 மணி வரை.
மணமகன் இல்லம்: 27-8-1985 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 7-00 மணி வரை.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. வைத்திலிங்கம் தம்பதிகள், கல்லூரி வீதி, காங்கேசன்துறை.

வி. சிவசுப்பிரமணியம் தம்பதிகள், (ஓய்வுபெற்ற அதிபர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி), டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(192)

சோவியத் யூனியனில் அமெரிக்கர்களை கண்காணிக்க புற்றுநோய் உண்டாக்கும் திரவம்?

மாஸ்கோவிலிலுள்ள அமெரிக்கர்களுக்கு யு. எஸ். தூதரகம் எச்சரிக்கை

லண்டன், ஆக–22

சோவியத் யூனியனிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் விதத்தில் மர்ம இரசாயனத் திரவமொன்று உபயோகப்படுத்தப்படுகின்றதாம். இத்திரவம் புற்று நோயை உண்டாக்கும் சக்திகொண்டதாகக் காணப்படுகின்றதென வும் மாஸ்கோவிலுள்ள அமெரிக்கர்கள் புகார் செய்துள்ளனர்

இம்மர்மத் திரவம் குறித்துத் தகவல்கள் வெளியானதை யடுத்து மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அங்குள்ள சகல அமெரிக்கர்களையும் அழைத்துக் கூட்ட மொன்றை நடத்தியது அக் கூட்டத்தில் இத்திரவம் குறித்து எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சும் இத்திரவவிடயம் குறித்துக் கவனையையும் ஆட்சேபத்தையும் வெளியிட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சோவியத் யூனியனிலுள்ள டார் கார்கள், மற்றும் வாகனங்கள், அவர்களின் தங்கு மிடங்களிலுள்ள கதவுப் பூட்டுகளையும் நடமாட்டங்களையும் இரகசியமாக நோட்டமிடும் வகையிலேயே இந்த இரசாயனத் திரவம் உபயோகப்படுத்தப்படுகிறது.

அமெரிக்கர்களின் மோட்டார் வாகனங்களின் பிறேக் வயர்களை அறுத்து விபத்துக்களை ஏற்படுத்துவதற்கும் இத்திரவம் பூசப்படுகிறது

பின்னர் அத்திரவம் சோவியத் ஒற்றர்களால் இரகசியமான முறையில் பரிசோதிக்கப்பட்டு அமெரிக்கர்களின் நடவடிக்கைகள் அறியப்படுகின்றன.

கடந்த பல வருட காலமாக இத்தகைய திரவக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் கடந்த ஆண்டு முதல் இத்தகைய பரிசோதனை கட்டுமீறியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது இம்மர்மத் திரவத்தினால் புற்றுநோய் அபாயமும் ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

சோவியத் யூனியனிலுள்ள அமெரிக்கர்களின் இப்புனரை யடுத்து அமெரிக்க ராஜாங்க அமைச்சு சேர்ந்த சுற்றுலா பாதுகாப்பு நிபுணர்களும், டாக்டர்களும் மாஸ்கோ விரைந்துள்ளனர். இவர்கள் அங்கு பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்

எதிர்வரும் நவம்பரில் சோவியத் தலைவர் திரு. கோபச்சேவைச் சந்திக்கும்போது இம் மர்மத் திரவம்பற்றி அதிபர் ரீகன் பிரஸ்தாபிப்பார் என வும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சோவியத் யூனியன் இக்குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. அமெரிக்கர்களே சோவியத்மீது ராஜதந்திர வட்டாரங்களில் அவப்பெயரை உண்டுபண்ணும் விதத்திலேயே இக்குற்றச்சாட்டுக்களை வெளியிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

நாராயணர் ஆலயத்துக்கு வாகனம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வர நாகவரதநாராயணருக்கு நாக வாகனம் செய்யப்பெற்றுள்ளது ஒட்டுவளி வே. சுந்தரலிங்கத்தாரால் உருவாக்கப்பெற்ற இத்திருத்தேர் உடைய இவ்வாகனம் சுவாமியைத் தாங்கிவரும் போது தன்னைச் சுற்றிலும் கண்களை அசைத்தும் நாக்குகளை நீட்டியும் இயங்கும், இம் மாதம் 28-ம் திகதி புதன் கிழமை இவ்வாகனத்தில் முதல் முதலாக நாராயணர் வீதி வலம் வருவார்.

பூட்டோ மகன் ஷாநவாஸ் நல்லடக்கம் முடிந்தது பெனஸிருக்கு வரவேற்பு

லாகூர், ஆக-22

முன்னாள் பாகிஸ்தானியப் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோவின் மகன் ஷாநவாஸ் பூட்டோவின் மரணச் சடங்குகள் நேற்று சிந்து மாநிலத்தில் இடம்பெற்றன.

இம்மரணச் சடங்கில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பூட்டோவின் மக்கள் கட்சி ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷாநவாஸின் சகோதரி பெனஸிர் பூட்டோ மரணச் சடங்குகளில் கலந்துகொள்ள பிரான்ஸிலிருந்து பாகிஸ்தானின் மொஹஞ்சதாரோ விமான நிலையம் வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை அவரது ஆதரவாளர்கள் வாழ்த்துக்கோஷமெழுப்பி வரவேற்றனர் பின்னர் அவர் வீடு சென்றபோது வீதியின் இரு மருங்கிலும் மக்கள் திரண்டு நின்று அவரை வரவேற்றனர்.

கடந்த 19 மாத காலம் இவர் பாகிஸ்தானுக்கு வெளியே இருந்தார். நாடு திரும்பினால் இவர் கைதாவார் என எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை.

சகோதரனின் மரணச் சடங்கையொத்து மத ஆசாரப்படி 40 தினங்கள் அவர் பாகிஸ்தானில் தங்கும் அனுஷ்டிப்பார் அதன் பின்னரும் தாம் தமது கட்சிவேலைகளைக் கவனிப்போவதாகப் பேட்டியளித்துள்ளார்

பாகிஸ்தான் அரசு இவரது நடவடிக்கைகளிமீது தடைகளை விதித்து அரசியற் குறுக்கீடுகளை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பூட்டோவின் மகன் ஷாநவாஸின் பூதவுடல் கடந்த ஒரு மாதகால இடைவெளிக்குப்பின்னரே பிரான்ஸிலிருந்து பாகிஸ்தான் கொண்டு வரப்பட்டது இவர் அங்கு மர்மமான முறையில் இறந்திருக்கக் காணப்பட்டார்.

இலங்கைத் தமிழர் படுகொலை: எம். ஜி. ஆர். கண்டனம்

வாஷிங்டன், ஆகஸ்ட் 22

"இலங்கையில் எதிர்காலம் அங்கு வாழும் தமிழர்களின் நன்மை கருதியும் அண்டை நாடான இந்தியாவின் நல்லெண்ணத்திலும் மிக பெருமளவுக்கு தங்கியுள்ளது இதனால் இலங்கை அரசு நல்ல அறிவுடன் செயற்பட்டு இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க உதவ வேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் கடந்த சில நாட்களில் அதிகமாக கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் வாஷிங்டனில் இருந்து வருத்தவெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த சில நாட்களாக இராணுவத்தினரால் பெருமளவிலான தமிழர்கள் கொல்லப்பட்டமை குறித்து வன்மையாக கண்டனம் தெரிவித்த அவர் இந்திய பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் முயற்சியால் 'நிபுபு' பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது இலங்கை இராணுவத்தினரின் கொடுமையான செயல்கள் இந்த சமரசத் தீர்வையே பாதித்து விட்டன என்றார்.

எந்த நம்பிக்கையுடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நம்பிக்கையை இலங்கை இராணுவத்தினரின் நடவடிக்கைகள் கெடுத்து விட்டன என்றார்.

3 மாதங்களின் பின்னர் இராமேஸ்வரத்தில் மீண்டும் இலங்கை அகதிகள் வருகை!

சென்னை, ஆகஸ்ட் 22

மூன்றுமாதகால இடைவெளிக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் இராமேஸ்வரம் வர ஆரம்பித்துள்ளனர்.

வவுனியாவில் கடந்தவாரம் இடம்பெற்ற வன்முறை காரணமாகவே இப்புதிய அகதிகள் வருகை ஆரம்பித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 87 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 331 பேர் இராமேஸ்வரம் வந்தடைந்தனர்

இவர்கள் வருகை குறித்து தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு திராமசுவாமி நேற்று தலைமை வெளியிட்டார் ஏனைய இலங்கை அகதிகளுக்குப்போன்று இவர்களும் புனர்வாழ்வுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (கி)

லெபனானில் கடந்த 10 தினங்களில் 250 பேர் கொல்லப்பட்டனர்!

பயணிகள் 'ஜெட்' விமானமும் தீவைத்துச் சேதம்!!

பெய்ரூட், ஆகஸ்ட் 22

லெபனானில் கடந்த பத்து தினங்களாக இடம்பெற்று வரும் வன்முறைகளில் 250 பேர் வரை கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று பெய்ரூட் சர்வதேச விமானநிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பலத்த தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்தத் தாக்குதல்களின்போது நிகழ்ந்த குண்டுவீச்சுக்களில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர்.

பெய்ரூட் விமானநிலையத்தில் நின்ற லெபனான் தேசிய விமானச்சேவையின் பயணிகள் ஜெட் விமானம் ஒன்றும் தீவிடப்பட்டு சேதமாக்கப்பட்டது. இத்துடன் வேறொரு சரக்கு விமானமும் சேதமானது

இவற்றைவிடுத்து அங்கு நின்ற இன்னுமொரு விமானம் பாதுகாப்புக்கருதி சைப்பிரஸ்சிற்கு செல்லத்தது பெய்ரூட் விமானநிலையம் இத் தாக்குதல்களையடுத்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது

இதேவேளை பெய்ரூட்டில் இடம்பெற்றுவரும் வன்முறைகளுக்கு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சிரியாவின் உதவி நாடப்பட்டுள்ளது. சிரியா இக்கு போரில் இறங்கியுள்ள பிரஜைகளிடையே நீண்ட போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ளும்வகையில் தீவிரமாக செயற்பட்டுவருகிறது. (கி)

லோங்கோவால் மறைவுக்கு அமெரிக்கா, சோவியத், ஜேர்மனி அனுதாபம்!

புதுடில்லி, ஆகஸ்ட் 22

சீக்கிய அகாலிதள கட்சித் தலைவர் சன்ஹரிசிங் லோங்கோவால் மறைவுக்கு அமெரிக்கா, சோவியத் யூனியன் மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன

'லோங்கோவால் சீக்கியர்களின் பிரச்சினைதீர துணிவுடன் செயற்பட்ட தலைவர்' என்று அமெரிக்க நியூஸ்வீக் டைம்ஸ் பாராட்டியுள்ளது

லோங்கோவாலின் மறைவு இந்திய சமாதான விரும்பிகளுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்று சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது

மே. ஜேர்மன், லோங்கோவாலின் மறைவுக்கு கவலை தெரிவித்துள்ளதுடன், அதற்குக் காரணமாகவிருந்த பயங்கரவாதத்தை பூரணமாக ஒழித்துக்கட்ட வேண்டும்என்று தெரிவித்துள்ளது. (வ)

அமெரிக்க உதவியை ஏற்க திருமதி பன்டெலா மறுப்பு!

டேர்பன், ஆகஸ்ட் 22

அமெரிக்கா வழங்கமுன்வந்த உதவியை ஏற்க தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் பத்தாயிரம் டாலர்கள் பண

(7-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

நகரங்கள் சீர்குலைந்துபோய்விட்டன. கிராமங்களில் இயற்கையாகக் கிடைக்கும் காற்றை மின் விசிறியின் கீழே அனுபவிக்கமுடியாது.

— கவிஞர் கண்ணதாசன்.

நமது நோக்கு

மிருகம், மனிதன், தெய்வம்!

மிருகம், மனிதன். தெய்வம்.

மிருகத்துக்குப் பகுத்துச் சிந்திக்கும் ஆற்றல் இல்லை. அதனால் நிரந்தரமாக அது மிருகமாகவே இருந்து வருகின்றது.

மனிதன் பகுத்துச் சிந்திக்கிறான், அதனால் தன்னிலும் அறிவு குறைந்த மிருகங்களையும், மனிதர்களையும் தனது வளர்ச்சிக்கும் சொகுசுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றான், கண்ணுக்குப் புலனாகாத இயற்கைச் சக்திகளையெல்லாம் அறிவின் சக்திகொண்டு கட்டுப்படுத்தி மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பிரயோகித்துக்கொள்கின்றான்.

தன்னைப்போல் பிற மனிதனையும் மதித்து, அவர் தம் இன்பதுன்பங்களைத் தனது இன்ப துன்பங்களைப் போலவே கருதிச் செயல்படுபவன் தன்னிலையிலிருந்து ஒருபடி உயர்கின்றான். இப்படியானவர்களேபிற உயிர்களையெல்லாம் தன் உயிர் போல் எண்ணிச் செயல்படும் மகான்கள் உலகமாந்தரின் உய்வுக்காக உடல் பொருள் ஆவி எதனையும் பொருட்படுத்தாமல் பணிபுரியும் இவர்கள் வானுறையும் தெய்வத்தின் நிலைக்கு உயர்ந்துவிடுகின்றார்கள்.

இப்படியான மனிதர்களைப் பற்றிச் சரித்திரங்களில் படிக்கின்றோம்; இதிகாசங்களில் அறிகின்றோம்; சமய நூல்களில் புரிந்துகொள்கின்றோம். நடைமுறையில் காண்கின்றோமா வெனில், அரசியல் புகழும் அதிகார வெறியும்கொண்ட மூன்றாந்தரத்தினரைப்போல் அவர்கள் விளம்பரங்களை நாடுவதில்லை; இலைமறைகாய்களாகவே இருந்துவிடுகின்றார்கள்.

என்றாலும் அவ்வாறான உயர்ந்த குணம்படைத்த மனிதர்களின் செயல்கள் சிலசந்தர்ப்பங்களில் தற்செயலாகவேனும் வெளிப்பட்டுவிடுகின்றன. அச்சமயங்களில்தான் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களேயென்று எண்ணுகின்றோம்.

என்னதான், இனவெறியும், குரோதமும், வஞ்சக சூழ்ச்சிகளும், வளர்க்கப்பட்டுவிட்டபோதிலும், இனப்படுகொலைகளுக்கென்றே படை பட்டாளங்கள் உருவாக்கப்பட்டபோதிலும், மனிதனை மனிதன் நேசிக்கும் மனப்பான்மை மக்களிடமிருந்து செத்துவிடவில்லையென்று ஆறுதல் அடைகின்றோம்.

அண்மையில் மதவாச்சியருகே நிகழ்ந்த ரயில் விபத்தின்போது ஆபத்தான நிலையிலிருந்த தமிழ்ப்பயணிகளுக்கு அப்பகுதியில் வாழும் சுமார் 25 பேர் கொண்ட சிங்களவர் கோஷ்டி மிகுந்த அன்புடன் உதவிகள் புரிந்ததாக கிடைத்துள்ள செய்தி எம்மை வியப்பில் ஆழ்த்தியதில் அதிசயமில்லை. சில தினங்களுக்கு முன்தான் அப்பகுதியில் யாழ்தேவி ரயிலை எதிர்பார்த்து காடையர் கோஷ்டியொன்று காத்திருந்ததாக செய்தி வெளிவந்திருந்தது. அது மட்டுமல்ல, அண்மைக்காலங்களில் தமிழர்கள் அடிக்கடி துன்பங்களுக்குள்ளாவதும் அப்பகுதிகளுக்கே உரிய மரபாகமாறி வந்துள்ளது.

நாடு முழுவதும் தமிழர்களுக்கெதிரான உணர்ச்சிகள் தட்டியெழுப்பப்பட்டுள்ள வேளையில் அடர்ந்த காட்டுப்பகுதியில், கேட்பாரற்றநிலையில், ஆபத்துக்குள்ளாகியிருந்த ரயில் பிரயாணிகளுக்கு சிங்களவர்களே முன்வந்து உதவியிருக்கிறார்கள் என்றால் அது சிந்தனைக்குரிய விடயம்தான்.

ஆபத்தான வேளையில் மனிதன் மனிதனுக்குதவி புரிவதென்ற மனிதஉணர்வினை இவர்கள் இன உணர்ச்சியின் காரணமாக இழந்துவிடவில்லையென்பதே அர்த்தம். இதேபோன்ற சம்பவங்கள் தமிழ்ப்பகுதிகளிலும் இடம்பெற்றதுண்டு. கடந்த வருடம் கிழக்கிலங்கையில் வாவியொன்றில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்துவிட்ட விமானமொன்றினுள்ளிருந்த சிப்பாய்களை தமிழ் மீனவர்கள் காப்பாற்றிய ஒரு சம்பவத்தை இங்கு நினைவுகூரலாம்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் இன்னலைத் தானே புரிந்துகொண்டு உதவிபுரிய முன்வரும்போது அதே மனிதனால் அடுத்த மனிதனின் உரிமைகளை மாத்திரம் புரிந்துகொள்ள முடியாமல்போவது எங்ஙனம்? நீதிநியாயங்களை குழிதோண்டி புதைத்துவிட்டு, அரசியல்அதிகாரமேநோக்கமாகக் கொண்டவர்களிடம் இக் குணங்களை எதிர்பார்க்கமுடியாது. அவைகளுக்கு மாறானஉணர்வுகளை வளர்ப்பதே அவர்கள் செய்யும் பணியாகவுள்ளது.

இந்நாட்டில் தமிழ்மக்கள் தமது சட்டபூர்வமான உரிமைகளை பெற்றுக்கொண்டுசிங்களவர்களோடு சரிநிகராக வாழ்வதாயின் நாட்டில் அமைதியும் சுபீட்சமும் நிலைபெற வேண்டுமாயின், சிங்களத் தலைவர்கள் தமது குரோதப் போக்கினை மாற்றிக்கொண்டு நியாய சிந்தையுடன் செயல்பட முன்வர வேண்டும். அது அமைதியையும், சுபீட்சத்தையும் கொண்டுவரும். இதையே மதவாச்சியில் மேலே நாம் குறிப்பிட்ட சம்பவம் சூட்சகமாக உணர்த்துகின்றது.

சின்னப்புதுக்குளம் மக்கள் வெளியேற்றம்

[வவுனியா]

வவுனியாசின்னப்புதுக்குளம் பகுதியை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைத்தொடர்ந்து அங்கு வசித்த தமிழ் மக்கள் பீதியடைந்து அயல் கிராமம் ஒன்றில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

'தப்லீஹ்' என்பதன் விளக்கம் என்ன?

(அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் 'தப்லீஹ்' மகாநாட்டையொட்டிய கட்டுரை)

இம்மாதம் 30ந் திகதிமுதல் செப்டம்பர் 1-ம் திகதிவரை கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை தப்லீஹ் ஜமாஅத் காரிகூன் மகாநாட்டில் கலந்துகொள்ள இலங்கையின் பலபாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான தப்லீஹ் ஜமாஅத் ஊழியர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள் இம்மாகாநாடு கூட்டப்படுவதின் பிரதான நோக்கம் இலங்கைவாழ் முஸ்லீம்கள் மத்தியில் புனித தீனுல் இஸ்லாத்தின் விழிப்புணர்ச்சி எந்நிலையிலுள்ளது மேலும் மேலும் விழிப்புணர்ச்சியை அதிகரிக்க என்ன முறைகளைக் கையாளலாம் என்பதையிட்டு கருத்துக்களைப் பரிமாறி கலந்துரையாடி அவைகளைச் செயல்படுத்துவதற்கே!

தப்லீஹ் என்பது ஒரு இயக்கமல்ல, அங்கத்தவர்களாக சேரவேண்டும் என்ற அவசியமுமல்ல, சந்தா வசூல் இவைகளுமில்லை. காலத்தையும். நேரத்தையும், கொஞ்சப் பணத்தையும் எடுத்துக் கொண்டு புறப்படுவதுதான் தப்லீஹ் சேவைக்குரிய மூலதனமாகும்!

தப்லீஹ் பிரச்சாரம் என்பது புதிதாக ஏற்பட்ட ஒன்றல்ல! உண்டானதுமல்ல!! அல்லாஹ்வின் வேதவசனங்களின் பிரகாரம், நாயகம் (ஸல்) அவர்களின் சொல் செயல்களின்பிரகாரம், எவ்விதத்திலும் இஸ்லாத்துக்கும், அதன் அடிப்படை நோக்கத்துக்கும் மாற்றமில்லாமல் உண்டான செயல்முறைத்திட்டம்தான் தப்லீஹ்! எனவேஇது ஒரு தனிமனிதனின் சுயசிந்தனையைக் கொண்டு உருவானதல்ல! தப்லீஹ் என்றால் எத்திவைத்தல் என்பது பொருள்படும்.

பீஸபீ (B) லில்லாஹ்! என்றால் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம்புரிதல் என்பது பகிரங்கமான கருத்தாகும். உலமாப் பெருமக்கள் இதன் உள்ளர்த்தத்தை அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவதோடு அல்லாஹ்வின் பாதையில் தீனுக்காக வெளிக்கிளம்புவதையும் மார்க்கப்பிரச்சாரம் புரிவதற்காக செல்வதையும் கருத்தாகக் கொள்ளலாம் என்ற விளக்கத்தையும் தந்துள்ளார்கள். புனித குர்ஆனிலிருந்து இதற்கு ஆதாரமாக சில வசனங்களையும் தருகின்றார்கள்.

''விஸ்வாசிகளே! அல்லாஹ்வுடைய பாதையியில் (யுத்தம் புரிவதற்கு) நீங்கள் புறப்படுங்கள் என்று உங்களுக்குக் கூறப்பெற்றால் (அவ்வாறு புறப்படாமல்) நீங்கள் ஊரில் தங்கிவிடுவதன் காரணமென்ன? மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டு நீங்கள் திருப்தியடைந்துவிட்டீர்களா? மறுமை(யின் வாழ்க்கை)க்கு முன்பாக இவ்வுலக வாழ்வின் இன்பம் வெகு அற்பமானதே! சூரா:- அத்தௌபா வசனம் 38. மேலும் அல்லாஹ் சூரா அத்தௌபா வசனம் 24-ல் எட்டு விசயங்கள் உங்களை அல்லாஹ் அவனுடையதூதர், அவனுடைய பாதையில் யுத்தம் புரிவதைவிட மிக்க விருப்பமானவைகளாயிருந்தால் (நீங்கள் உண்மை விஸ்வாசிகளல்ல!) நீங்கள் அடையவேண்டிய தண்டனைபற்றிய அல்லாஹ்வின் கட்டளை வரும்வரையில் நீங்கள் எதிர்பாருங்கள் என்ற கருத்தையும் இறைவன் எமக்கு எச்சரிக்கையாக தந்துள்ளான்.

மேலும் சூரா:- அத்தௌபா வசனம் 112ல் சுவர்க்கவாசிகள் யார் யார் என்பதைக் குறிப்பிடும் போது ''மார்க்கக் கல்வியைக்கற்றல், மார்க்கப் பிரசாரம் செய்தல் போன்ற மார்க்கக் விசயங்களுக்காக யாத்திரை செய்வோர் விஸ்வாசிகள்! நபியே! அவர்களுக்கு சுவர்க்கத்தைக் கொண்டு நீர் நன்மாராயம் கூறுவீராக!'' என்றும் கூறுகின்றான்.

மேலும் அதே அத்தியாயத்தில் வசனம் 121ல் ''அன்றி இவர்கள் சிறிதோ, பெரிதோ (அல்லாஹ்வுடையபாதையில்) எந்தப்பூமியைக் கடந்தபோதிலும் அவர்களுக்காக அது பதிவு செய்யப்படுகிறது அவர்கள் செய்த இவைகளை மிக அழகான கூலியை அல்லாஹ் அவர்களுக்குக் கொடுக்கின்றான்!'' என்றும் கூறியுள்ளான்.

மேற் கூறிய இறை வசனங்களிலிருந்து மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு, பிரச்சாரம் செய்வதற்கு, அல்லாஹ்வுக்காக, அவனதுபாதையில் யாத்திரை செய்வது எவ்வளவு முக்கியம் என்பது எமக்குத் தெரியவருகின்றது. இவற்றுக்காக சுவனத்தைக் கொண்டு அல்லாஹ் நன்மாராயம் கூறியிருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அல்லாஹ்வுடைய பாதையில் எந்தப் பூமியைக் கடந்தாலும் அது பதிவு செய்யப்படுகின்றது என்று அல்லாஹ் கூறியிருப்பது இந்த வேலையின் மகத்துவத்தையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

எழுதியவர்:-
அகமது கரீம் அக்பார்ஜின்னா

வெள்ளிச்சிந்தனை

நல்வினையும் துன்பமும்

ஒருவன் பாம்பையும் வளர்க்கிறான் பசுவையும் வளர்க்கிறான் என்றால் அவனுக்குப் பசுவால் கிடைக்கக்கூடிய நன்மையும் கிடைக்கும்; பாம்பினால் கிடைக்கக்கூடிய நஞ்சும் கிடைக்கும்.

இப்படியிருக்க; பசுவை ஒருவன் வளர்ப்பதால் ஏற்படக்கூடிய நன்மைமட்டுமே அவனுக்குக் கிடைக்கவேண்டும். பாம்பை வளர்ப்பதால் உண்டாகக்கூடிய தீமை ஏற்படலாகாது என விரும்புவது நியாயமில்லை. ஆனால்;

சைவ ஆலயங்களில் திருப்பணி-கும்பாபிஷேகம் என்பன செய்தவர்களுக்கோ அவர்களின் குடும்பத்தவருக்கோ ஏதாவது நட்டம் துன்பம் ஏற்பட்டதும்; இவர்களுக்கு ஏன் இப்படி வருவான்? என்று கேட்பவர்களையே காணமுடிகின்றது.

அதிக லாபத்தால் ஒருவன் நற்கருமம்-சிவபுண்ணியம் செய்கிறான் என்பது உண்மை. ஆனால் நம்மிடையே அதிக லாபத்தை ஈட்டும் ஒருவன் தொழிலாளிகளின் உழைப்பை கவருதல், அல்லது பலரை ஏமாற்றுதல், அல்லது பங்காளரை வஞ்சித்தல் என்பன போன்ற ஏதாவது ஒரு தீவினைக்கும் ஆளாயிருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறான தீவினைகள் சிவபுண்ணியம் செய்த ஒரு புண்ணியவானுக்கும் துன்பங்களை உண்டாக்கும் என்பது உறுதி. இப்படி தீவினை காரணமாக ஒருவன் துன்புறும்போது அவன் செய்த தர்மகாரியங்களை மட்டும் நினைத்து அவன் செய்த தர்மம் அவனைக் காக்கவில்லையே என்ற கருத்து அறியாமையின் தன்மையேயாகும்

ஒருவன் செய்த தர்மச் செயல்மட்டுமன்றி ஒருவனின் தர்ம விருப்பம்கூட அவனுக்கு நன்மை செய்யும் என்பது நமது சமய வரலாறுகள் பலவற்றினால் தெளியப்பட்ட உண்மையாகும். ஆதலால்; நாம் செய்யும் புண்ணியச் செயல்கள் எப்போதும் நன்மையையே பெருக்கும் என்பது நிச்சயமான உறுதியாகும்.

மனசறியத் தீமைசெய்தவர் தம் தீவினைக்குப் பிராயச்சித்தம் செய்யும்வகையில் புண்ணிய காரியங்களில் ஈடுபடுமுன் தம்மால் பாதிக்கப்பட்டவர்களுக்குவேண்டிய ஆறுதல்களைச் செய்தல் அவசியம்.

தீவினை செய்தார்
கெடுதல்
நிழல் தன்னை
வீயாது
அடி உறைந்தற்று:

—திருக்குறள்

—அருளாளன்

இயக்கத்தின் முயற்சியால் தொடர்ந்து இயங்கும் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்க மாதகலக்கிளை கடந்த சில காலங்களாக நிதிநிலைமை காரணமாக சீராக இயங்க முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து சங்கத்தின் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அண்மையில்தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகத்தினர் சங்க வளர்ச்சியில் தலையிட்டு எடுத்துக்கொண்ட முயற்சியால் சங்கம் தொடர்ந்து இயங்கக் கூடிய நிலையில் இருப்பதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்

மேலும் அவர் தெரிவிக்கையில் மேற்படி சங்கத்தில் 4[illegible] தொழிலாளர்கள் கடமைபுரிந்து வந்தனர் என்றும் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட நிதிப்பிரச்சனைகளால் ஊழியர்கள் சம்பளம், சங்க வாடகை கொடுக்க முடியாதநிலையில் சங்கம் பல கஷ்டங்களை எதிர்நோக்கியது. சம்பளம் கொடுபடமுடியாத நிலையில் 22 தொழிலாளர்கள் விலகிவிட்டனர். ஏனைய தொழிலாளர்கள் அண்மையில் ஒருநாள் வேலை நிறுத்தம் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்படி இளைஞர்கள் தலையிட்டு எடுத்துக்கொண்ட முயற்சியினால் சங்கம் இன்று தொடர்ந்தும் இயங்கக் கூடிய நிலையில் இருக்கிறது எனவும் ஊழியர் சம்பளம் வழங்கப்படுவதாகவும், சங்க உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்வதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

பரு. பிரஜைகள் குழு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் 3ம் வட்டார கிளைத் தெரிவு அண்மையில் பருத்தித்துறை பிரஜைகள் குழுச்செயலாளர் திரு. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வி ஆண்டியப்பர், உபதலைவர் திரு. கே. துரைராசா, செயலாளர் திரு. ந. சிவசுப்பிரமணியம், தனாதிகாரி திரு. பொ. மகாதேவன். ஏழுபேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ச)

யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

மதவாச்சிக்கு அண்மையில் இடம்பெற்ற இன்ரசிற்றி ரயில் விபத்தில் படுகாயமடைந்த அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இரு அதிகாரிகளும் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு இவ்விபத்து நடைபெற்றது தெரிந்ததே.

சுன்னாகத்தைச் சேர்ந்த இ. இராசரத்தினம் (57 வயது) இவர் அனுராதபுரம் புகையிரத நிலைய தலைமை ஹாரிட்டாகக் கடமையாற்றியவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி. இராசையா (60வயது) இவர் கொழும்பு புகையிரத இலந்திரப்பகுதி உதவி அதிகாரியாகக் கடமையாற்றுபவர். இருவரும் லீவில் தங்கள் ஊருக்கு வந்து பின்னர் கடந்த திங்கட்கிழமை கடமைக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்தில் சிக்கினர்.

(ச- மா)

மோட்டார் சைக்கிள் விபத்து: ஒருவர் பலி; மற்றவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சயிக்கிள் விபத்தில் பண்டத்தரிப்பை சேர்ந்த திருச்செல்வம் ராசன் (19வயது) பலியானார். அவருடன் சென்ற வர் காயமடைந்தார்.

பலியான ராசனின் மரண விசாரணையை யாழ். மரண விசாரணை அதிகாரி க. சேவன் நடத்திவருகிறார்.

காயமடைந்த அகஸ்தின் ரொனல், பேசமுடியாத நிலையில் இருப்பதால், பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (ச)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இரத்த சேகரிப்பு இயக்கம்

(யாழ்ப்பாணம்)

இரத்தமின்றித் தவிக்கும் மக்களின் உயிரைக்காப்பாற்று வதற்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினர் இரத்த சேகரிப்பு இயக்க மொன்றை நடாத்த முன்வந் துள்ளனர்.

இக்கழகத்தினர் முதல்முயற் சியாக நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா உற்சவகால த்தில் அதாவது 10-ம் திருவிழா அன்றும் சப்பரம், தேர், தீர்த் தம், பூங்காவனம் ஆகிய திரு விழா நாட்களிலும் இரத்தம் சேகரிக்கவுள்ளனர்.

இந்த முயற்சிக்கு மக்கள் நல்லாதரவு வழங்க வேண்டும் என்று லியோ கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (மா)

யாழ். பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அரசாங்க செயலகத் திற்கு நேற்றுக்காலை 8 மணிக்கு சுலோக அட்டைகளுடன் வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பிரதான வாசலில் மறியல் செய்தனர்.

சகல ஊழியர்களையும், உள்ளே செல்லவிடாது தடை செய்தனர்.

செயலக கொடிக்கம்பத்தில் 3 கறுப்புக்கொடிகளை மாணவர்களே ஏற்றினார்கள் செயலகத்திற்கு வந்த ஊழியர்கள் அனைவரும் திரும்பிச்சென்றனர்.

யாழ். மாநகரசபையின் 3 பிரதேசசபைகளுக்கு முன்னால் மாணவர்கள் மறியல் செய்ததால், ஊழியர்கள் திரும்பிச் சென்றனர். மாநகர சபை வாசலில் சுலோக அட்டைகள் காணப்பட்டன.

வங்கிகளுக்கு முன்னால் நேற்றுக்காலை வாடிக்கையாளர்கள் கியூவில் நிற்பதைபோலும், மாணவர்கள் வந்து மறியல் செய்ததும் அவர்களைக்கண்டு சென்றனர் வங்கி ஊழியர்களும் திரும்பிச் சென்றனர்.

கல்விக்கந்தோர் முன்னிலையிலும் பல்கலைக்கழக மாணவர்கள் மறியல் செய்ததினால் ஊழியர்கள் திரும்பிச் சென்றனர். பரீட்சைகள் நடைபெறவுள்ள பரீட்சைப் பிரிவு மட்டும் இயங்கின.

மக்களின் அத்தியாவசிய சேவையெனக் கருதப்பட்ட ஆஸ்பத்திரி, நீதிமன்றம், தொலைத்தொடர்பு பிரிவுகளில்மறியல் நடைபெறவில்லை.

மாணவர்கள் தமிழ், ஆங்கில சுலோக அட்டைகளுடன் சிறையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்யக் கோரி, நேற்றுக்காலை சைக்கிளில் ஊர்வலம் சென்றனர்.

சுலோக அட்டைகளில், சிறையில் கொலை செய்யப்பட்டவர்களின் விபரங்களை வெளியிடுக விசாரணை செய் அல்லது விடுதலை செய், அரசியல் கைதிகளுக்கு அரசியல் அந்தஸ்தை வழங்கு சிறையில் நடத்தும் படுகொலைகளை நிறுத்து என்ற வாசகங்கள் காணப்பட்டன. (ச)

மூன்லத்திவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டார்.

இனந்தெரியாத இளைஞர்களினால் அதிகாலை இரவு கடத்திச் செல்லப்பட்ட இவர் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் புதுக்குடியிருப்பு சந்தியில் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார்.

இவரது மரணத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் உரிமை கோரிய அட்டை ஒன்று சடலத்துக்கு அருகில் வைக்கப் பட்டிருந்தது.

இவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சமாதான நீதவானும் முன்னாள் கிராம சேவையாளரும் ஆவார்.

இலங்கை ஜனாதிபதிமீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெட்டி கடந்த திங்கட்கிழமை 'இந்து'வில் எழுதியுள்ளார்.

இலங்கைத் தமிழருக்கு சுயாட்சிக்கான வசதியைத் தருவேன் என்று அவர் அளித்த வாக்குறுதியை மீறியிருப்பதோடு, முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அவரது பழைய அதிகாரப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தை முன்வைத்தே மீண்டும் விளையாட்டுக்காட்டஆரம்பித்திருப்பதை இந்திய அதிகாரிகள் இப்போது புரிந்துகொண்டுள்ளார்கள்.

புதிய வன்முறைகளுக்கு இடமின்றி நிம்பு பேச்சுவார்த்தைகள் முற்றுமுழுதாக முறிந்துபோகாமல் பார்த்துக்கொள்வதே இந்திய அதிகாரிகளின் இப்போதைய முயற்சி. இந்த அடிப்படையிலேயே தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை எவ்வாறாயினும் மகாநாட்டுக்குத் திரும்பச செய்வதற்கு முயற்சி செய்யும்படி வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி கோரப்பட்டிருக்கிறார் என ரெட்டி எழுதியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசு முன்வைத்த அதிகார பகிர்ந்தளித்தல் பற்றிய யோசனைகள், உச்சிமகாநாட்டின் போது திரு. ஜெயவர்த்தனா வால் குறுநிபளித்த யோசனைகளுக்கு மிகவும் குறைவாக விருக்கின்றன என்பதை திரு. ராஜீவ் காந்தி தொலைபேசி மூலம் இலங்கை ஜனாதிபதிக்கு அறிவிக்க விருப்பதாகவும் பேச்சுவார்த்தைகளின்போது அதிக அற்புதமான யோசனைகளை முன்வைக்கும்படி அவர் வற்புறுத்துவார் என்றும் திரு. ரெட்டி எழுதியுள்ளார்.

சமஷ்டி கோரிக்கையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி பெறுவது தொடர்பாக தமிழ் தீவிரவாத இயக்கங்களுக்கிடையில் கருத்துமோதல் இருப்பதாக கருதும் இலங்கை அரசு இவர்களை மேலும் நெருக்குவதின் மூலம் இன்னும் தீவிரமான போக்கினை கடைப்பிடிக்கச் செய்து அதன்மூலம் அவர்களை இந்தியாவிலிருந்து இயங்குவதை இந்திய அரசைக் கொண்டு முறியடிக்க செய்யலாம் என இலங்கை அரசு கருதுவதாகத் தெரிகின்றது.

இதே சமயம் இலங்கை அரசு தனது பாதுகாப்புப் படைகளை மீளத்தயார்செய்து கொள்வதற்கு புத்த நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொள்வதாகக் கவலையளிக்கும் செய்தி வந்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டுவருவது புதுடில்லியிலுள்ளவர்களுக்குக் கவலையளித்துவருவதுடன் அதற்கு ஒரு முடிவுகட்டும் விதத்திலேயே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காண இந்திய அதிகாரிகள் நிரை முறையில் பெருமுயற்சி எடுத்துவருகிறார்கள் என்று திரு. ரெட்டி எழுதியுள்ளார்.

திரு. ஜயவர்தனவின் இக் கட்டான நிலைமையுறிந்து இந்திய அரசு மிகுந்த அனுதாபம் காட்டஎத்தனித்துவரும்வேளையில், இலங்கைத் தமிழருக்குப் பூரண சுயாட்சி வழங்கப்படுகிறதென்ற தமது வாக்குறுதியிலிருந்து தப்பிக்கொள்ள அவர் அங்கலைக் காலத்தில் முயன்று வருவதானது அவர் மீதான இந்தியாவின் நகிபிக்கையை ஆட்டம் காணச்செய்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பட்டினியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது 7 ஆயிரம் பேரும், தம்பனகாமம் முகாமில் 150 குடும்பங்களும் அதிகளாக இருக்கிறார்கள்.

முகாம்களில் அதிகளாக இருப்பவர்களுக்கு அப்பகுதிகளிலுள்ள மக்களே தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருவதாகத் தெரியவருகிறது.

நிலாவெளி முகாமில் மூன்று பேருக்கு வயிற்றோட்ட நோய் காணப்பட்டு திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களில் உள்ளவர்களைப் பராமரிக்க ஒரே ஒரு டாக்டர் மாத்திரம் இருப்பதாகவும், மருந்து வசதிகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா - மா)

லீடா

முழு ஆடை நிறைந்த பால்

• உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட ஒல்லாந்திலிருந்து "லீடா" கிடைக்கின்றது.

• பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாத மளிக்கப்படுகின்றது.

• டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன

விற்பனையாளர்

மில்லர்ஸ் லிமிடெட்

IMAGE

மயூரா என்ரபிறைஸ்
MAJURA ENTERPRISES

அவசர வேண்டுதல்

வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு என்னிடம் கடவுச் சீட்டை ஒப்படைத்தவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும் புதியவர்களும் தொடர்பு கொள்ளவும். அத்துடன் அமெரிக்கா, பிரான்ஸ், இங்கப்பூர் ஏனைய நாடுகளுக்கும் விசா வினரவில் ஒழுங்கு செய்து தரப்படும். பிரயாணத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். ஸ்ராபியா செல்பவர்களுக்கும் அறிவுரைகளும் ஒழுங்கும் செய்து தரப்படும். மூன்று வாரத்தில் பிரயாணங்களை மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் செய்துகொடுக்கப்படும். 23, 24, 25 திகதிகளில் சந்திக்கவும்.

அ மகேந்திரன்,
155 5) குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4909)

பணிவான வேண்டுகோள்

எனது கணவர் இ. மகிலீஸ்வரன் (வேலை நடத்துனர், நீர்பாசன இலாகா, பாவற்குளம்) சென்ற திங்கட்கிழமை 12-08-85-ந் திகதி சில இளைஞர்களால் பாவற்குளத்தில் கடத்திச்செல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கோண்டாவிலில் வசித்து வரும் எனக்கும் எனது குடும்பத்திற்கும் இது மிகவும் அதர்ச்சியையும் துயரையும் கொடுத்துள்ளது. எனது கணவர் ஒரு அப்பாவி. எனது இனத்திற்கு ஒருவித துரோகமும் செய்யவில்லை என நான்முழுமுதற்கடவுளை நம்புவதால் தயவு கூர்ந்து அவரைக் கடத்தியவர்கள் எனது நிலையையும் அவரின் இரண்டு சிறு பெண் குழந்தைகளுக்காகவும் விடுதலை செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

மனைவி, பிள்ளைகள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (197)

உடனே கறந்த பசுப்பாலின் ருசி!

பால் வெண்ணை கூடுதலாக உள்ளது!

இணையற்ற சக்தி மிக்க பால்!

ஆனைக்கோட்டைப் பகுதியில் வழிப்பறி அதிகரிப்பு!

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை - மானிப்பாய் வீதியிலுள்ள பள்ளத்தடியில் இரவு நேரங்களில் தற்போது வழிப்பறி அதிகரித்து வருவதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன் இரவு 8 மணியளவில் இவ்வழியால் சென்ற ஒருவரிடம் மோட்டார் சைக்கிளும் கைக்கடிகாரமும் வழிப்பறி செய்யப்பட்டதாம்.

இதன்காரணமாக இப்பகுதியால் இரவு நேரங்களில் செல்லும் மக்கள் மிகவும் அச்சம் கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இப்பகுதியில்போதியமின்சார வெளிச்சம் இல்லாமையும் இவ்வித வழிப்பறிகளுக்கு இடமளிப்பதாக அறியப்படுகின்றது.

ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் இன்று முதல் 25-ம் திகதிவரை நடைபெறவிருந்த 'இலங்கையில் ஆசிரியர்களின் சட்டரீதியான அந்தஸ்து' தொடர்பான கருத்தரங்கு பின்போடப்பட்டிருப்பதாக இல. த ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் தெரிவித்தார்.

26-ம் திகதி தொடக்கம் 30-ம் திகதிவரை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவிருந்த 'இலங்கையில் கல்வித்துறையில் பெண்களுக்கான சமவாய்ப்புகள்' பற்றிய கருத்தரங்கு குறிப்பிடத்தக்க நடைபெறுமென்றும் அவர் கூறினார்.

பொத்துவில் முதல்வரின் அச்சம்

(அட்டாளைச்சேனை)

"இப்பகுதியில் கடமையாற்றும் இரு அரசாங்க அதிகாரிகள் பற்றி நான் பெரிதும் அச்சம் கொண்டுள்ளேன். ஒருவர் தபாலதிபர் திருநாவுக்கரசு, மற்றையவர் உதவி அரசாங்க அதிபர் ஜனூப் அப்துல் மஜீத். இவ்விருவரும் குறுகியகால எல்லைக்குள் அட்டாளைச்சேனை மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கைப் பதித்துகொண்டுள்ளனர். இத்தகைக்கு இவர்கள் காலம்நேரம்பாராது மக்களுக்கு வேண்டியவற்றைச் செய்துவருகின்றார்கள். இப்படியானவர்கள் அரசியலில் பிரவேசித்துவிட்டால் என்னையும் தோற்கடித்து விடுவார்கள் போல் இருக்கிறது" இவ்வாறு பொத்துவில் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனூப் எம் ஐ உதுமாலெப்பை அண்மையில் அட்டாளைச்சேனையில் இராப்போசன விருந்துவைபவம் ஒன்றில்பேசுகையில் குறிப்பிட்டார்.

அட்டாளைச்சேனை நாலாம் குறிச்சி கூராமோதயசபை மேற்படி வைபவத்தைஒழுங்கு செய்திருந்தது தலைவர் ஜனூப் உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பொத்துவில் முதல்வர் பேசினார்.

ஓய்வு பெற்றார்

[சுழிபுரம்]

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கடமை புரியும் அதிபராக விளங்கிய திரு. சி. விசுவலிங்கம் தமது ஐம்பத்தெட்டாவது வயதில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், சுதேசன் தமிழ் வித்தியாலயம், சுற்றன் சென் யோன் பொஸ்கோ கல்லூரி ஆகிய தென் பகுதிப் பாடசாலைகளிலும் வடமராட்சியைச் சேர்ந்த சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம் வலந்தலை வடக்கு கு.மி.த பாடசாலை காரைநகர், சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார். சுழிபுரம் கல்வேம்படியைச் சேர்ந்த இவர் சுழிபுரம் மத்திய ஐக்கிய நாணய சங்கம், சுழிபுரம் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர உதவிச்சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினராக விளங்கி வருகின்றார். இவரது சேவை நலன் பாராட்டு விழா பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையினரால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

கைதடியில் நினைவுச் சின்னம்

(சாவகச்சேரி)

கடந்தவருடம் ஆயுதப்படையினரால் கூட்டுக்கொல்லப்பட்ட தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் நினைவாகவும், பொதுமக்கள் ஐவரின் நினைவாகவும் மேற்படி சங்க அலுவலகத்தின் முன் நினைவுச் சின்னமொன்று எழுப்பப்பட்டுள்ளது.

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் சு. சுரேஷ் இந்த நினைவுச் சின்னத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

சங்க மண்டபத்தில் அகால மரணமான இந்த ஊழியர்களினதும், பொதுமக்களினதும் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுரேஷ், நா. நிருஞ்சேந்திநாதன், வே. நடராஜா, என்.கே. துரைசிங்கம் போன்றோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

விஷகடி வைத்திய கருத்தரங்கு

(டண்டீதரிப்பு)

விஷகடி வைத்திய கருத்தரங்கு, "குலசேகரம்" விஷகடி வைத்திய நூல் வெளியிடும் இம்மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பண்டீதரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

திரு. ந. கருணையானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு கா. இராமநாதன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக அதிபர் "தொழிலதிபர் திரு.கனகராசா கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக வராற்றுத்துறை பேராசிரியர் திரு. சி. க. சிற்றம்பலம் பண்டீதரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை யாற்றவுள்ளார்கள்.

இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திதி: 7 1985-8-23)
கிழமை: வெள்ளி
திதி: அட்டமி
முன் இரவு வரை
நக்ஷத்திரம்: விசாகம்
காலை 8-10க்கு மேல் அனுஷம்

மேடம்: தொழில் துறையில் எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். நண்பனின் கடினமான வேதனையைத் தரலாம். மனதிடம்வேண்டும்.

இடபம்: புதியபாதைக்குரிய வழி இன்று பிறக்கும். களஸ்திரவழியால் சுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும்.

மிதுனம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் ஏற்படலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம்; கவனம் வேண்டும்.

கடகம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள் முயலவர் ஒருவர் தக்கசமயத்தில் ஆதரவு தருவார்.

சிங்கம்: உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கையை உம்மீது பதியும். குடும்பத்திலும் சுமூகமான நிலவும்.

கன்னி: சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும். அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுக்கள் கிடைக்கும்.

துலாம்: இனப் பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையைச் சமாளிக்கலாம்.

விருச்சிகம்: வாய்வு, கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்

தனுசு: பொருள் வரவிற்கு இடமுண்டு மாணவருக்கு கல்வியால் பெருமை வந்துசேரும். புதிய நண்பர் ஒருவரின் உறவும் கிடைக்கும்.

மகரம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும்.

சுதிருடலிலும் வேண்டியதைச் சாதிப்பீர்கள்.

கும்பம்: கல்வித்துறையில் புதிய ஆர்வம் பிறக்கும் வானசொந்தக்காரர்களுக்கு நல்ல நாள். சிலருக்குத் தாய்வழியால் தனமும் சேரும்.

மீனம்: தெளிந்த மனம் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

திருமலை
= வே. ரவீந்திரன் -

நீடிப்பு

(கொழும்பு)

பொலீஸ் கான்ஸ்டபிள்களில் சேருவதற்கான விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 31-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது திருமணமாகாத 18 முதல் 30 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-கு)

நவமணி

மாலை
5-00 செய்திகள்
5-05 'கார்ட்டூன்' நிகழ்ச்சி
5-30 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி (தமிழ்)
6-00 கொத்மலைத் திட்டம் (விவரணச்சித்திரம்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 கேள்வி பதில் (சிங்களம்)
7-25 இசை நிகழ்ச்சி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-30 சிறுவர் நாடக நிகழ்ச்சி (சிங்களம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 நினைகூறிப்பு
9-45 கொத்மலைத் திட்ட நிகழ்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS
IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள (18g x 16g)
★ வெள்ளைச் சிமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம் Rs: 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

COLOMBO - BERLIN
விசாவுடன்

08-09-85 ஆந் திகதி

செல்ல விருப்புவோர் உடனடியாக 6 PASSPORT SIZE படங்களுடனும் PASSPORTஉடனும் வருகிற ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பதாகத் தொடர்புகொள்ளவும்.

மிகக் குறிக்கப்பட்ட ஆசனங்களே கையிலிருப்பதால் உடன் தொடர்புகொள்ளவும்.

குறைந்த கட்டணத்தில்
விமானச் சீட்டுக்கள்

CONFIRMATIONS, RE-CONFIRMATIONS, CANCELLATIONS போன்ற பணிகள் யாவற்றையும் நாம் கவனிப்போம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், (ALTERATIONS, RENEWALS; BONDING) ஆகியவற்றுக்கான எல்லா ஒழுங்குகளும் யாழ்ப்பாணத்திலேயே செய்து தரப்படும்.

MACK TRAVELS
இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791 — 24414 (Residence)

BRANCH OFFICE:
QUICK TRAVELS
SARASWATHY GARDEN, CHURCH ROAD,
CHAVAKACHCHERI. Telephone: 273.

நியூ சினிமாலயா
(R. G பிஸ்டிக் மேல்மாடி)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
INTRUSION CAMBODIA
பல ஆயிரக்கணக்கான இளைஞரின் வேண்டுகோளுக்கிணங்க புத்தம் புதியபிரதியாக வெளியிடப் பட்டுள்ளது.

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending Grievences
(JUNGLE WOMEN)
—இன்று மட்டும்—

உஷா மினி
10-30, 2-30, 4-30, 6-30
CODE NAME WILD GEESE
6 கெரில்லாக்கள் இராணுவ முகாம் மீது தாக்குதல்.

ஸ்ரான்லி மினி
8"X8" திரைவானில்
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
LAST ORGY
ஹிற்லரி ஆட்சியில் திவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பகரமும் சித்தரிக்கும் படம்.
Adults only

மேரி(ஜெயர் மினி சினிமா
(கன்னுதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அசுர உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் நிகில் நிறைந்த கதை.

குமரன் மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
(War Film)
பயங்கர சண்டைகள், குதிரை ஒட்டங்கள் நிறைந்த படம்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி, பானுமதி நடித்த
கள்வனின் காதலி
22, 23 திகதிகளில்
கமல், அம்பிகா நடித்த
உயர்ந்த உள்ளம்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
4-30p m and 7-15P.m only
"Kill Them all and Come Back alone"

இன்று
(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டைசங்கரத்தை அருள் மிகு முருகமூர்த்தி ஆலய கதிர்பூரத் திருவிழா இன்று23ம்திகதி நடைபெறும். (ச)

கண்ணிவெடி செயலிழப்பு
(வவனியா)
செட்டிகுளத்திற்கும் பறை பறை என்னுமிடத்துக்கும் இடையிலுள்ள விதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
சிரஞ்சீவி—ராதிகா
டக்கர் ராஜா
சண்டைப்படம்

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
CANNIBAL HOLOCAUST
Adutls only

ராஜா தியேட்டர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
முத்துராமன் - ஜெயலலிதா நடிக்கவேலு
கணவன் மனைவி

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45
Intrusion Cambodia
படத்தை ஒருமுறை பாருங்கள் மறுமுறையும் பார்ப்பீர்கள். பார்த்தவர்களின் தீர்ப்பு. லிபேர்ட்டியில் பார்க்கவேண்டும். நகரத்தில் தரமான நல்ல படங்களை திரையிடும் ஸ்தாபனம். பார்த்தோம் பார்த்தோம் நல்ல படம் பார்த்தோம் என்ற சந்தோஷம் உங்களுக்கு இப்படம் தருகிறது. இன்றைய இளைஞர்கள் விரும்பும் ஒரே படம். நாளை சிறுவர்கள் பார்ப்பதும் இதுவே. தவறவிடாதீர்கள்.

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30 p.m.
புறூசிலி நடித்த
THE DRAGON DIES HARD
கராட்டி Film
தவிர்க்க முடியாத காரணத்தால் காண்பிக்க முடியாத படம். இன்று முதல் காண்பிக்கப் படும். பயங்கரக் கராட்டிச் சண்டைகள் நிறைந்தது.
முதல் முறையாக யாழ்ப் பாணத்தில் காண்பிக்கப் படுகிறது.

விடோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
நியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
யாது மகேந்திரவின்
நீங்கள் கேட்டவை
சஸ்பென்ஸ் கலர்

மண்டைதீவு உபவானொலி நிலையத்தின் ஒடுகள், மரங்கள் இரவோடு இரவாக மறைகின்றன

(மண்டைதீவு)

யாழ்ப்பாணம் மண்டைதீவு உப வானொலி நிலையம் அமைந்திருந்த பாரிய கட்டிடங்களின் ஒடுகள், சீற்றுகள், தீராந்திகள் முதலியன இரவோடு இரவாக களவாடப் பட்டுள்ளன.

இந்த நிலையத்தின் கட்டிடங்களின் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஒடுகள், 150 சீற்றுகள், தீராந்தி இதுவரை களவுபோயிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த சில நாட்களாக இக் கொள்ளை நடந்துள்ளது. இக் கொள்ளையை நடத்திய வர்கள் தன்மை இயக்கத்தினர் என்று கூறியே இக் கொள்ளையை நடத்தியதாக அங்கு காவலுக்கு நின்ற பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவித்தனர்.

பல லட்சம் ரூபா பெறுமதியான இந்த கட்டடங்கள் வானொலி நிலையம் இயங்காமல் விட்டமையைத் தொடர்ந்து பாவிப்பு இன்றியே கிடக்கின்றன. ஆயினும் பாதுகாப்பு ஊழியர்கள் அக்கட்டடத்தை காவல் புரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில் கட்டடத்தின்

விபத்து ஒருவர்காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதால் ஹோட்டல் ஊழியர் ஒருவர்படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தடியில் நடைபெற்றது.

மேற்படி ஊழியர் சி.குமாரசாமி ஆறுகால் மடத்தடியிலுள்ள வைரவர் கோவிலில் வழிபாடு செய்துவிட்டு திரும்பும் போது எதிரேவந்தமோட்டார் சைக்கிள் தம்மை மோதியது என்றும் தெரிவித்தார்.

மை, கரல்கல் படுகாயமடைந்த நிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

அமெரிக்க

(3-ம் பக்கத் தொடர்சி)

பிரமுகர் திருமதி விஜினி மண்டேலா மறுத்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் திருமதி விஜினிமண்டேலாவின் வீடு டேர்பன் நகரில் சேதமாக்கப்பட்டது. இவ் வீட்டை திருத்தியமைக்கும்வகையிலேயே அமெரிக்கா இவருக்கு பத்தாயிரம் டாலர் பணம் கொடுத்துதவ முன்வந்தது.

திருமதி மண்டேலா இவ் வுதவியை ஏற்மறுத்தமை குறித்து தெரிவித்திருப்பதாவது: "இப் பணஉதவியை நான் ஏற்றால், அமெரிக்கா தென்னபிரிக்க இனஒடுக்கல் கொள்கைக்குஎதிரானதன்று கருத்து வலுவடைந்துவிடும். அந்நாடு உண்மையில் தென்னபிரிக்க வெள்ளையர் அரசுக்கே சார்பானது."

அமெரிக்காவினதும் பிரிட்டனதும், தென்னபிரிக்க வெள்ளையர் அரசு மீதான எதிர்ப்பு நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை" என்றார்.

திருமதி மண்டேலாவின் கணவர் திரு. நெல்சன் மண்டேலா தென்னபிரிக்க வெள்ளையர் அரசினால் 20 வருடகாலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

ஆணையாளருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ப.நோ.கூ சங்கத்தின் 15 ம்கிளையின் பொதுச் சபை பிரதிநிதிகள் தெரிவு தொடர்பாக கிளை உறுப்பினர் ஒருவர், கூட்டுறவு உதவி ஆணையாளருக்குப் புகார் செய்துள்ளார். (க)

வவனியாவில் நடந்த மாநாடு

(வவனியா)

வவனியாவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு சுமுகமான ஒரு நிலையை ஏற்படுத்துமுகமாக வவனியா அரசாங்க உயரதிகாரிகளைக் கொண்ட மகாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவனியா இணைப்பதிகாரி இம்மகாநாட்டைக் கூட்டியிருந்தார்.

வவனியா அரசாங்க அதிபர் புகையிரதநிலைய அதிபர், தபால் அதிபர், வைத்திய அதிகாரி ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

மேற்கொண்டு வவனியாப் பகுதியில் எதுவித வன்முறைச் சம்பவங்களும் இடம் பெறாமல் இருக்க தாம் நடவடிக்கை எடுத்திருப்பதாக இணைப்பதிகாரி உறுதியளித்திருப்பதாகவும் அதற்கு சகலரும் ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16ம் திகதி அதிகாலை வவனியா நகரில் தமிழ்க் குடும்பங்கள் வரிசை, வரிசையாக நிறுத்தவைத்து, சுட்டுக் கொல்லப்பட்டதும், வீடுகள் எரிக்கப்பட்டதும் தெரிந்ததே.

மீண்டும் வீடுகள் தீக்கிரை

(திருக்கோணமலை)

திருக்கோணமலைப் பகுதியில் உள்ள கன்னியாக் கிராமத்திலுள்ள தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

ஜீப்வண்டிகளிலும், மற்றும் பஸ், வான்களில் சென்றவர்களே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதன்தீ தொடர்ந்து பிறிய வீடுகள் தமிழர்கள் வெளியேறி நிலாவெளி, சாம்பல் தீவு ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். (இரா-மா)

ஒடுகளும், மரங்களும் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டனவு இந்த பாரிய கட்டடங்களை அழித்தவிடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது இக்கொள்ளையினால் இந்த உபவானொலி நிலைய கட்டடங்களை முற்றாக இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி கட்டடங்களுக்கு பொறுப்பான பகுதியினரும் இது குறித்து பாராமுகமாகவே இருந்து விடுகின்றனர்.

பொது மக்கள் உதவியை நாடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம் பெற்ற சம்பவத்தினால் போது அதிஸ்டமான பலர். மக்களுக்கு புனித சேவியர் பாடசாலையின் துயர் துடைப்புச் சங்கத்தின் உதவியோடு தங்கியுள்ளனர்.

பொது மக்களின் உதவியோடு இயங்கி வரும் இச் சங்கம், தொடர்ந்தும் உணவு, உடை, மருந்து வகைகளை பொது மக்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிடம் இருந்தும் எதிர்பார்க்கிறது.

24, 25-ல் ஓய்வுதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு இம்மாதம் 24-ம், 25-ம் திகதிகளில் [சனி, ஞாயிறு] யாழ். பொலிஸ் விடுதியில் இயங்கும் வங்கிக் கிளைகளில் வைத்து ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

வங்கி ஊழியர்கள் வழக்கம் போல் கேட்டதும் திரும்பியுள்ளதால் ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

திருப்பித்தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உபரப் புலத்தை சேர்ந்த மறைஞாசிரியர் ம. யேசுதாசனின் சொந்தப்பாவிப்பிலுள்ள ஹொண்டா மோட்டார் சைக்கிள் இம் மாதம் 7 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

உடன் தருவதாக கூறியிருந்தும் இன்றுவரை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இதனால் மறைபணியாளரும், இறைபணிக்காக தாம் பல இடங்களுக்குசென்று நடாத்தி வரும் இலைப்பயிற்சிகளையும் தொடர முடியாத நிலையில் இருப்பதாகவும் இறைபணி தொடர தமது மோட்டார் சைக்கிள் திருப்பித்தரும் தவறாறு கேட்டுள்ளார். (ச)

V'DEO VISION
(வீடியோ விசன்)
யாழ்ப்பாணத்தில் திருமணம் மற்றும் சகல மங்களகரமான வைபவங்களுக்கும்,
நவீன கருவிகளைக்கொண்டு "வீடியோ" படம் எடுத்து நிகழ்ந்தவற்றை நினைவூட்டும் வகையில் கண்டு களிப்புற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
நிபுணர்களின் சிறந்த சேவையும் குறைந்த செலவும்
வீடியோ விசன்,
213, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (196)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

"சிறையிலிருந்து தப்பவிரும்பவில்லை ஒரு விசாரணை முன்பாக தோன்றவே விரும்பினேன்!"

—வண: சிங்கராயர்

(கொழும்பு)

"நான் சிறையிலிருந்து தப்ப விரும்பவில்லை. ஒரு விசாரணை முன் தோன்றவே விரும்பினேன்" என்று வண. பிதா ஆபரணம் சிங்கராயர் தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அவர் மீதான வழக்கு நேற்று நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அரச சட்டத்தரணி சி. ஆர். டி. சில்வா சிங்கராயரைக் குறுக்கு விசாரணை செய்தார்

வண சிங்கராயர்தொடர்ந்து சாட்சியமளித்ததாவது:- "பல தரப்பட்ட மக்கள் விடுதலைப் போராளிகளாக உள்ளார்கள். அப்போராட்டங்களுக்கு நீண்டகாலச் சரித்திரம் ஒன்று உண்டு ஆதலால் இவை பற்றி பதிலளிப்பது கடினமாகும்.

"நிலைமைக்கு ஏற்றவாறு விடுதலைப் போராளிகளின் நிலைகளும் மாறுகின்றன. பொருளாதாரம், அரசியல், சமூக சேவைத் துறைகளில் ஈடுபட்டோரும், ஆயுதமேந்திய இளைஞர்களும் இதில் அடங்குவர்

"ஆயுதமேந்திய இளைஞர்களுக்காக நான் அனுதாபப் படுகிறேன் என்று பொலிஸாருக்குக் கூறியுள்ளேன்.

"'எக்ஸ்-8' என்ற ஆவணத்தில் 90-ம் பக்கத்தில் உமாமகேஸ்வரன் முகுந்தன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். அப்பெயர் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்தது.

"சிலன் ஆசீர் எனவும், சின்னராசா ஸ்ரீராஜா எனவும், நாகராஜா வாசுபி எனவும், பிரபாகரன் பிஷப் எனவும் 'எக்ஸ்-8' ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது.

"இப்பெயர்களை இப்படி எழுதும்படி ஹில்ட்டன் பெரேராவே என்னிடம் வற்புறுத்தினார். இதற்கென என்னிடம் ஒருவாரகாலமாக கேள்விகள் பல கேட்டு இவ்வாறு பதில் எழுதும்படி என்னைப் பழக்கினார்கள்" (கி)

மின்கம்பத் தண்டனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில், சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க நபருக்கு நேற்று 'மரண தண்டனை' விதிக்கப்பட்டது.

சடலத்துக்கு அருகில் 'இனத்துரோகிகளுக்கும், காட்டிக் கொடுப்போருக்கும் இதுதான் தண்டனை' என்று கூறும் சுவரொட்டி காணப்பட்டது. தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

கண்டி வீதியில் இ. போ. ச. டிப்போவிற்கு அண்மையில் மின்கம்பமொன்றில் மரணமானவரின் சடலம் கட்டப்பட்டுள்ளது.

மரணமானவர் கிளிநொச்சி பொலிஸ், இராணுவ முகாமுக்கு முன்பாக இருந்து சப்பாத்து முதலான பாதணிகள் தைப்பவரெனத் தெரியவந்தது.

விசாரணைக்குழு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கொல்லப்பட்டவர்கள் சம்பந்தமாக விசாரணை ஒன்றை நடாத்த இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று இன்று வவுனியா வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

மரண அறிவித்தல்

திருமதி

சிவபாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

3-ம் குறுக்குத்தெரு - யாழ்ப்பாணம்

வேலணை கிழக்கு காலஞ்சென்ற கார்த்திகேசர் பொன்னம்பலத்தின் அருமை மகளும், காலஞ்சென்ற புறக்டர் வி. கே. சுப்பிரமணியம் (புங்குடுதீவு) அவர்களின் அன்புமனைவியுமான திருமதி சிவபாக்கியலட்சுமி சுப்பிரமணியம் 21-8-85ல் இலண்டனில் காலமானார். இவர் Dr விக்னராசா (அவுஸ்திரேலியா), Dr சிவராசா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற Dr. பாலராசா, லோகராசா (எஞ்ஜினியர்-கனடா), யோகேஸ்வரி, தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr சிவானந்தன் (லண்டன்), Dr உமாபதி (லண்டன்), தர்மராணி விக்னராசா (அவுஸ்திரேலியா), ஞானரமணி பாலராசா (அவுஸ்திரேலியா), வசந்தா லோகராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கா. பொ. இரத்தினம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), நடராசா, பாலசுப்பிரமணியம், திருமதி நாகரத்தினம் விஜயமூர்த்தி (மண்டைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்,
77, சந்தானமாதா கோவில் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(194)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி. 66ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24120.

மயான பூமிபோல் காட்சிதரும் வவுனியாவில் வானத்திலிருந்து 'அசிட்' வீசப்பட்டதாம்!

நால்வருக்குக் காயம்

(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டம். மகா இறம்பைக்குளம், பகுதியில் "ஹெலிகொப்டர்" இலிருந்து 'அசிட்' வீசப்பட்டு நால்வர் காயப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வவுனியா நகருக்கு இப்பொழுது பந்தோபஸ்துப் படையினர் நடை பவனியாகவே வருகின்றனர். வரும் போது வீதிகளையும், பாலங்களையும் சோதனையிடுகின்றனர்.

வவுனியா வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து இங்கு ஆறு அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் ஐயாயிரம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

கண்டி வீதியில் பல தமிழர்களைக் காணவில்லை எனவும் கூறப்படுகிறது.

அயல் கிராமங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அகதிகளாகவுள்ளனர்.

விகாரைக்கு பலத்த காவல்

வவுனியா - கண்டி வீதியில் உள்ள பௌத்த விகாரைக்குப் பலத்த காவல் போடப்பட்டுள்ளது. இரவு, பகல் பந்தோபஸ்துப் படையினர் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா-கண்டி வீதியில் உள்ள இரு பிரபல அரிசி ஆலைகளில் பல லட்ச ரூபா பெறுமதியான உபகரணங்கள் இப்பகுதியில் வன்முறைச்சம்பவம் நடைபெற்ற தினத்தின்பின்னர் பட்டப்பகலில் சூறையாடப்பட்டுள்ளன.

சூறையாடப்பட்ட ஆலையின் உபகரணங்களும், விற்பனைக்குத் தயாராகவிருந்த பெருந்தொகையான அரிசி மூடைகளும் லொறி மூலம் ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவ்விரு ஆலைகளிலும் ஆறு தொழிலாளிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. அமரர் செ. சுந்தரலிங்கத்தின் பண்ணைக்கு அருகாமையிலேயே இவ்விரு ஆலைகளும் உள்ளன.

வவுனியா நகரம் மயான பூமிபோலக் காட்சியளிக்கின்றது கண்டி வீதி பகுதியில் வீடுகள் உடைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் காணப்படுகின்றன. இப்பகுதியில் சனநடமாட்டத்தையே காணமுடியவில்லை.

பெண் டாக்டர் படுகொலை

(கல்முனை)

கல்முனையிலுள்ள தனியார் வைத்திய நிலையப் பெண் டாக்டர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திருமதி எஸ். ஆர் விக்கிரமசிங்க என்னும் இந்த டாக்டர் தனது கணவனுடனும், இரண்டு வேலையாட்களுடனும் வசித்து வந்தார். (ரா)

திம்புபேச்சு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு டிக்ஸிற், கொழும்பில் நேற்று செய்தியாளர் மகாநாடொன்றைக்கூட்டி திம்பு பேச்சுவார்த்தை பற்றி விபரமாகக் கூறினார்.

திட்டவட்டமான நல்லதொரு முடிவு ஏற்படுவதற்கு முன்பதாக திம்பு பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது குறித்து இந்தியா பெருங்கவலை கொண்டுள்ளது என்று தெரிவித்த திரு டிக்ஸிற்; கடந்த ஜூன்மாதம் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு முடிந்தளவு கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்றும்; அப்போது தான் ஒத்திவைக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தையினை மீண்டும் தொடர முடியுமென்று இந்தியா நம்புவதாகவும் கூறினார்

இலங்கையில் மீண்டும் வன்செயல்கள் தலைதூக்கியதாலும் இனப்பிரச்னை தீர்வுகளுக்காக இலங்கை அரசு தெரிவித்த யோசனைகளுக்கும் தமிழர் பிரதிநிதிகள் மத்தியில் எழுந்த எதிர்ப்புகளுக்குமிடையே இடைவெளி நிலவியதால் திம்புபேச்சுவார்த்தைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று இந்தியா கருதியதாகவும் எனினும் இருதரப்பினருக்குமிடையில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட உதவியுள்ளதாகவும் திரு. டிக்ஸிற் கூறினார்.

அண்மைக்கால சம்பவங்களைத் தொடர்ந்து மீண்டும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியா செல்வதாக அறிக்கைகள் தெரிவிப்பதாகவும் எனினும் இது புதிய பிரச்னையை தோற்றுவிக்காது என்றும் கூறிய திரு டிக்ஸிற்; போர் நிறுத்த உடன்பாடானது எழுத்து மூலம் உருவாக்கப்பட்டதொன்றல்ல என்றும், இந்தியாவின் நிலைப்பாட்டை பொறுத்தமட்டில் போர் நிறுத்தமானது கால வரையறைக்குட்பட்டதல்ல. மாறாக இலங்கைப் இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணப்படுவதே இந்தியாவின் நோக்கம் ஆகும் என்றும் தெரிவித்தார். (ரா)

ராஜீவ்-ஜே.ஆர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனவுடன் நேற்றுத் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினார்.

இலங்கை இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசு தரப்பினரையும், தமிழர் தலைவர்களையும் திம்புபேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்ளச் செய்வது சம்பந்தமாகவே இத்தொடர்பு அமைந்ததாக அறியப்படுகிறது.

இதற்கிடையே திம்பு சென்றிருந்த அரசு தரப்புக் குழுவினர் நாளை கொழும்பு திரும்புவார்கள். குழுத்தலைவர் கலாநிதி எச். டபிள்யூ ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை இன்று புதுடில்லியில்சந்திப்பார். (ரா)

சிறையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கோரமான முறையில் துன்புறுத்தப்பட்டனர் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்ட இளைஞரில் சிலர் இறக்கவும் நேரிட்டது"

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

"பயங்கரவாத தடைச் சட்டத்தையு மீறி 18 மாதத்திற்கு மேலாக எவ்வித விசாரணையுமின்றி ஸ்ரீலங்கா வதை முகாம்களில் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் அடிப்படை மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட முறையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவ் மனித உரிமை மீறல்களுக்கெதிராக தங்காலைச் சிறையிலிருக்கும் இளைஞர்கள் விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையை முன்வைத்து பகுதி பகுதியாக தமது கோரிக்கை நிறைவேறும் வரை சாகும் வரை உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்து தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசினால் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை இது மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டம், மானுடத்தை காப்பதற்கான போராட்டம் வதை என்பது மனித நாகரீகத்திற்கப்பாற்பட்ட மனிதநேயங்களுக்கப்பாற்பட்ட ஒரு கீழ்த்தரமான செயலாகும் இன்று இவ்வதை மனோவியாதிபிடித்த ஒருவனது நடவடிக்கையாகவே வளர்ச்சியடைந்துள்ளது. பொதுவாக வதை என்பது எங்கு, எவ்வடிவத்திலாவது பிரயோகிக்கப்பட்டாலும் அதை தடுத்து நிறுத்த வேண்டியது மனித உலகின் கடமையாகும்"

நயினாதீவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நயினாதீவிலிருந்து நேற்றுக் காலை குறிகட்டுவான் நோக்கிச் சென்றபிரயாணிகள் படகு ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் திருப்பிவிடப்பட்டதாகவும், காலை 10க்கும் 11 மணிக்கும் இடையில் படகுச் சேவை ஒரு தடவை மாத்திரம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (மா)

ஓடும் ரயிலில் இளம் பெண் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் இருந்த இளம்பெண் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால்கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையைச்சேர்ந்த இப்பெண் காங்கேசன்துறைக்கு அண்மையில் உள்ள முகாம் ஒன்றில் உறவினரைச் சந்தித்துவிட்டுச் சென்றபொழுதே கடத்தப்பட்டாராம்.

யாழ் நாவலர் வீதி ரயில் கடவையில் யாழ்தேவி மெதுவாக நகரும் தருணம் பார்த்து இனந்தெரியாதநபர்களால் அப்பெண் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

கண்டிச் சம்பவம்

(கண்டி)

நாட்டில் வன்செயல்களுக்குத் தூபமிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ஈடுபட்டதாகக் கருதப்படும் கண்டியைச் சேர்ந்த ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

முக்கிய அரசியல்வாதியும், உள்ளூராட்சிமன்ற உறுப்பினருமான அந்த நபர் மது போதையில் இருக்கும்போது கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கண்டியில் வசிக்கும் ஒரு சிலரின் வீட்டுச்சுவர்களிலும், கடைகளிலும் வன்முறைகளைத் தூண்டும் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்ததைத் தொடர்ந்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டுள்ளது

கடந்த சில நாட்களாக கண்டி நகரில் உள்ள சில தமிழர்களின் கடைகள் மூடப்பட்டுள்ளன. (மா)